# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(with UGC 2(f) &12(B) status and NAAC Accredited with 'A' Grade in 1st Cycle)
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai – 600 097
Phone: 044 - 28389040 Website: www.tnteu.ac.in


**No.TNTEU/R/Admin./PMS/Guidelines/2023/01291** **Date: 13.07.2023**


Dr.P.C.Naga Subramani, Ph.D
Registrar (i/c)


**பொருள் :** ஆதிதிராவிடர் நல இயக்குநரகம் – 2023–24ஆம் கல்வியாண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை – வழிகாட்டு நெறிமுறைகள் – தொடர்பாக.

**பார்வை :** ந.க.எண்.எல்4/16283/2022–3 நாள்: 03.07.2023

------

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வையில் குறிப்பிட்டுள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநரக கடிதத்தில் 2023–24ஆம் கல்வியாண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு, கல்லூரிகள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கடிதம் இத்துடன் இணைக்கப்படுகிறது.

எனவே, அவ்வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து கல்வியியல் கல்லூரிகளும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

13/7/23

**பதிவாளர் (பொ)**

**இணைப்பு:** மேலே குறிப்பிட்டுள்ள கடிதம்.

**பெறுநர்**

முதல்வர்கள்
இணைவுபெற்றுள்ள அனைத்து கல்வியியல் கல்லூரிகள்.

பதிவஞ்சல் மூலம்:

ஆதிதிராவிடர் நலத்துறை

| | |
|---|---|
| அனுப்புநர், | பெறுநர், |
| திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., | பதிவாளர், |
| இயக்குநர், | அனைத்து பல்கலைக்கழகம் |
| ஆதிதிராவிடர் நல இயக்குநரகம், | (இணைப்பில் உள்ளவாறு) |
| சேப்பாக்கம், | |
| சென்னை- 05 | |

ந.க.எண்.எல்4/ 16283 /2022-3 நாள்: 03.07.2023

அய்யா/ அம்மையீர்,

பொருள்: ஆதிந - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை - 2023-2024 - பள்ளி/கல்லூரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்புவது – தொடர்பாக

பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள்

.....

2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க மாணாக்கர்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அளவில் தயார் நிலையில் வைக்க வேண்டிய முக்கிய பொருண்மைகள் பின்வருமாறு.

1. அனைத்து கல்லூரிகளும் AISHE Code கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். ஏற்கனவே பெற்றிருப்பின் அவை பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
2. அனைத்து கல்லூரிகளிலும் மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பது குறித்து உதவி செய்யும் பொருட்டு, Scholarship Help desk ஒன்றை அமைத்திட வேண்டும்.
3. அனைத்து கல்லூரிகளில் கல்வி உதவித்தொகைக்கென Nodal Officer நியமித்திட வேண்டும்.
4. மாணாக்கரின் பெயர், பாலினம், பிறந்த தேதி ஆகியவை கல்வி சான்றிதழ்களில் (10ஆம் மற்றும் 12ஆம் வகுப்பு) உள்ளவாறு ஆதாரில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்ய

வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பள்ளி சான்றிதழ்களில் இடம்பெற்றுள்ளவாறு மாணாக்கரின் பெயர் ஆதாரில் மாற்றம் செய்யப்படவேண்டும்.

5. புதிய / புதுப்பித்தல் மாணாக்கர்கள் கட்டாயம் இணையவழி மூலம் (Online) வருமான சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும்.
6. மாணாக்கரின் பெயரில் வங்கி கணக்கு எண் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில், அவ்வங்கி கணக்கு எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
7. மாணாக்கரின் வங்கி கணக்கில் இடம் பெற்றுள்ள பெயர், அம்மாணாக்கரின் பள்ளி சான்றிதழ்களில் உள்ளவாறு இடம்பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
8. மாணாக்கரின் வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இணைக்கப்படவில்லை எனில், வங்கி கணக்குடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கான படிவத்தினை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் (இணைக்கப்பட்டுள்ளது).
9. மாணாக்கரின் வங்கி கணக்கிற்கு நேரடி பலன் பரிமாற்றத்தைப் (DBT) பெறுவதற்கு மாணாக்கரின் ஆதார் எண் NPCI உடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை https://resident.uidai.gov.in/bank-mapper என்ற இணைய முகவரி மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
10. மாணாக்கரின் ஆதார் எண் NPCI உடன் இணைக்கப்படவில்லை எனில் சம்மந்தப்பட்ட வங்கி மேளாலரை தொடர்பு கொள்ள அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.
11. மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள முந்தைய வங்கி கணக்கு எண்ணை மாற்றம் செய்யப்பட வேண்டும் எனில், மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட வேண்டிய புதிய வங்கி கணக்கு விவரங்களை அவ்வங்கியின் கிளை மேளாலரிடம் சமர்ப்பிக்கும் போது கட்டாயம் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட முந்தைய வங்கி கணக்கு விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
12. மாணவரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் கட்டாயம் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
13. கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் மத்திய / மாநில அரசின் கீழ் பணிபுரிந்தால், அவர்கள் பணிபுரியும் அலுவலரிடமிருந்து வருமான சான்றும் (pay slip) , மேலும் வருவாய்துறையிடமிருந்து வருமான சான்றும் (Income from all source - HRA நீங்கலாக) கட்டாயம் கல்வி நிறுவனத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.
14. **2023-2024 ஆம் கல்வியாண்டிற்கு, மாணாக்கர்கள் சார்பான கல்வி உதவித்தொகை, மாணக்கர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கும் வரை கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டாயம் மற்றும் திருப்பி அளிக்கப்படாத கல்விக் கட்டணத்தினை செலுத்த வற்புறுத்தக் கூடாது.**

2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான கல்வி உதவித்தொகை இணையதளம் விரைவில் திறக்கப்படவுள்ளதால், மேற்கண்ட விவரங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அனைத்து கல்லூரிகளுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- த.ஆனந்த்

ஆதிதிராவிடர் நல இயக்குநர்

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக